## மத்திய மாகாண தொழில்நுட்ப உதவியாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

1. மத்திய மாகாண தொழில்நுட்ப உதவியாளர் தரம் III இலுள்ள 08 வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை ஒன்றிற்காக மத்திய மாகாணத்தில் வசிக்கும் தகைமையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய திறமை அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள் மத்திய மாகாண அரச சேவையின் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III இலுள்ள பதவிகளுக்கு நியமனம் செய்வதற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

3. **வயதெல்லை :-**

   விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.

4. **கல்வித் தகைமைகள் :-**

   க. பொ. த. (சா. த.) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியெய்தியிருக்க வேண்டும்.

5. **தொழில்சார் தகைமைகள் :-**

   பரீட்சார்த்திகள் மேலே 04 இல் குறிப்பிட்டுள்ள தகைமைகளுடன் தேசிய தொழில்சார் தகைமைகளில் (NVQ) 05 ஆவது நிலையிலுள்ள, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப (சிவில் பொறியியலாளர்) சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6. **ஏனைய தகைமைகள் :-**

   (அ) இலங்கைப் பிரஜை ஒருவராக இருத்தல்.

   (ஆ சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல்

   (இ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவுடையவரென உறுதிப்படுத்தல் வேண்டும்.

7. **சம்பள அளவுத்திட்டம் :-**

   பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 இன் கீழ் உள்ள MT 1-2016 இற்கமைய
   ரூபா. 29,840 - 300X10 - 350X11 - 560X10 - 660X10 - 48,890/- ஆகும்

   பொது நிருவாக சுற்று நிரூபம் 03/2016 இன் உப அட்டவணை II இன் ஏற்புகளுக்கமைய 2018 ஆம் ஆண்டில் ரூபா. 23,674/- என்ற சம்பளப் படியில் வைக்கப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

   தரம் III இற்கு நியமனம்பெற்று 03 வருடங்கள் முடிவுறும் முன் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டியதுடன் நியமனம் பெற்று 05 வருடங்களுக்குள் 2014-01-21 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் பிரகாரம் இரண்டாவது அரச கரும மொழிக்கான தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**8. சேவை நிபந்தனைகள் :-**

(i) இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் இக்கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் வெற்றிடம் நிலவும் நிறுவனத்திற்கு இணைக்கப்படுவர்.

(iii) இந்நியமனப் பதவியில் குறைந்தது 05 வருடங்கள் கட்டாயமாக மத்திய மாகாணத்தினுள் சேவையாற்ற வேண்டுவதுடன், அக்காலப்பகுதியில் வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது வேறு பதவிகளுக்கு விடுவிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன் நியமனம் வழங்கப்பட்ட சேவை நிலையத்தில் கடமைப் பொறுப்பேற்கும் திகதியிலிருந்து ஆகக்குறைந்தது 03 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகளுக்கும், நிதி ஒழுங்குவிதிகள், அரசினால் மற்றும் மத்திய மாகாண சபையினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள், கட்டளைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

9. **(i) ஆட்சேர்ப்பு முறை:-**

மத்திய மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகளுள் திறமையின் அடிப்படையில் சான்றிதழ்கள் பரீட்சிப்பதற்காக நேர்முகப்பரீட்சையொன்றிற்கு உள்வாங்கப்பட்டு பின்னர் அரச நிருவாக சுற்று நிருபம் 15/90 இற்கமைய மாவட்ட சனத்தொகை விகிதாசரத்தின் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தெரிவு செய்யப்படுவர். நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது அத்துடன் எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் தனித்தனியாக குறைந்தது 40% புள்ளிகளைப் பெறாத விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்வதற்காக கவனத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.

**(ii) பரீட்சைத் செயற்றிட்டம் :-**

(அ) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் பரீட்சையில் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்

(இ) பரீட்சையை நடாத்தல், பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

**(iii) பரீட்சைக்குரிய பாடங்கள் :-**

இப் பரீட்சையானது இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :

1. நுண்ணறிவுப் பரீட்சை
2. தொழில்நுட்பவியல் வினாப்பத்திரம்.

**10. பாடவிதானம் :-**

1. <u>நுண்ணறிவுப் பரீட்சை</u>

   காலம் : 01 மணித்தியாலம்
   மொத்தப் புள்ளிகள் : 100

   இப்பத்திரமானது பரீட்சார்த்தியின் பொது விவேகம், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்யும் திறமை என்பவற்றை பரீட்சிப்பதற்கும் தீர்மானிப்பதற்குமான வினாக்களைக் கொண்டிருக்கும்.

2. <u>தொழில்நுட்பவியல் வினாப்பத்திரம்</u>

   காலம் : 03 மணித்தியாலங்கள்
   மொத்தப் புள்ளிகள் : 100

   இவ்வினாப்பத்திரமானது கட்டிட நிர்மாணத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், திட்டங்களை வடிவமைத்தலும் அதனை விளங்கிக் கொள்ளுதலும், நீர் விநியோகம், வடிகாலமைப்பு முறைமைகள், கழிவகற்றல் முறைகள் ஆகியன தொடர்பாக பரீட்சார்த்தி கொண்டுள்ள அறிவினை அளவிடும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும்.

   ஆட்சேர்ப்புக்கான முன்னுரிமைப் பட்டியலானது ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று தெரிவு செய்யப்படுகின்ற பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

**11. பிழையான தகவல்களை அளிப்பதற்கான தண்டனை :-**

விண்ணப்பப்படிவத்தினை நிரப்பும்போது சரியான தகவல்களை அளிப்பதில் கவனம் எடுக்கப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவராக இருப்பதாகக் காணப்படுமிடத்து அவரது பரீட்சார்த்த உரிமையானது பரீட்சையின் விதி, ஒழுங்குகளின் பிரகாரம் இந்தப் பரீட்சைக் காலப்பகுதியிலோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்த நிலையிலும் இரத்துச்செய்யப்படலாம்.

தவறான தகவல்களை அளிக்கும் விண்ணப்பதாரரொருவர் எந்த நிலையிலும் மத்திய மாகாண அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு உரியவராகக் காணப்படுவர். பரீட்சார்த்தியொருவருக்கு அனுமதி அட்டையொன்றினை வழங்குதலானது பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளை அவர் பெற்றுள்ளார் என்று கருதப்படலாகாது.

**12. பரீட்சைக் கட்டணம் :-**

அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமான ரூபா 600/- இனை மத்திய மாகாண சபை பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவுவைக்கும் பொருட்டு மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணபத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியினைத் தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்). செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள் செலுத்தப்படமாட்டாது. காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ பரீட்சைக் கட்டணமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**13. விண்ணப்பங்கள் நிரப்பியனுப்புவதற்கான அறிவுறுத்தல்கள் : -**

இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய ஏ4 அளவு தாளின் இரு பக்கங்களையும் பாவித்து அதன் முதலாவது பக்கத்தில் இல. 1-3 வரையான விடயங்களையும் மிகுதி மற்றைய பக்கங்களில் உள்ளடக்கியதாக விண்ணப்படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சு செய்து அல்லது தெளிவான கையெழுத்தினால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் பூரணப்படுத்தும் போது கீழ் குறிப்பிட்டுள்ள குறியீட்டு எண்களை பொருத்தமான கூடுகளில் இடவேண்டும்.

13.1 விண்ணப்பிக்கும் மாவட்டங்கள் என குறிப்பிடவேண்டியது விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டமாகும். மாவட்டங்களின் குறியீட்டு இலக்கங்கள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| கண்டி | - | 01 |
| மாத்தளை | - | 02 |
| நுவரெலியா | - | 03 |

13.2 மாதிரி விண்ணப்பப்படிவத்தை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் (www.psc.cp.gov.lk) பெற்றுக்கொள்ளலாம்.

13.3 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு 2018-07-15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

செயலாளர், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி

விண்ணப்பப்படிவத்தினை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “மத்திய மாகாண தொழில்நுட்ப உதவியாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018” என்று தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

13.4 தற்போது அரச சேவையிலுள்ள அலுவலர்கள் விண்ணப்பத்தின் இலக்கம் 12.0 தலைப்பின் கீழ் திணைக்களத் தலைவர்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

13.5 விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது ரூபா 240,360/- இற்கு கூடிய ஆண்டுச் சம்பளத்தை பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தரொருவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

13.6 நியமனம் வழங்க முன், வழங்கிய பின், அல்லது யாதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் யாதாயினும் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத்தன்மை அல்லது நியமனம் இரத்து செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

14. இப்பரீட்சையை நிகழ்த்துதல், நிகழ்த்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய விளக்கமளித்தல், இவ்வறிவித்தலில் வெளியாகாத வேறு விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழுவிற்குறியதாகும்.

கை/இ: ஆர். எம். என். ரத்நாயக்க
செயலாளர்
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை

2018 ஜூன் மாதம் 11 ஆம் திகதி
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி